# இலங்கையின் சாதனைகள்

இல. 3

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

## நிலங்களும் காணி அபிவிருத்தியும்

அரசாங்க தகவல் பகுதி வெளியீடு

# பெருமைக்குரிய சாதனை

எங்கள் நாடு பெரும்பாலும் விவசாய நாடு. நில அபி விருத்தியும் காணிகளும் எங்கள் வாழ்வில் மிகப் பிரதான மான அம்சங்களாக விளங்குகின்றன. நிலமில்லாதவர் களுக்கு நிலம் வழங்குதல், அகில இலங்கை நீர்ப் பாசனத் திட்டங்கள், வரண்ட பிரதேசக் குடியேற்றம் முதலியவைமூலம் நில அபிவிருத்தித் துறையில் நாங் கள் செய்துள்ள சாதனையையிட்டுப் பெருமைப்பட்டுக் கொள்ள இடமுண்டு.

நீர் நிலைகளைப் பயன்படுத்தும் முறைகளில் எங்கள் புராதன பண்பாடு தங்கியிருந்தது. எனவே கிராம நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் வரண்ட பிரதேசங் களில் நீரைச் செலுத்தி நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், எங்கள் புராதன கலாசாரத் தொடர்புகளையும் வளர்க்கிறோம்.

கிராமங்களிலிருந்து அதிகமதிகமான மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுப்பதைக் கட்டுப்படுத்துவது மட்டு மல்ல அரசாங்கத்தின் கொள்கை. ஜன நெருக்கடி நிறைந்த பகுதிகளிலிருந்து மக்களை குடியேற்றத் திட்டப் பகுதிகளில் சென்று வாழச் செய்து வருகிறது இன்று அரசாங்கம்.

அரசாங்கம் கடைப்பிடித்து வரும் இந்தக் கொள்கை, நாட்டின் சமுதாய அமைப்பில் மிகப் பெரும் மாறுதலை ஏற்படுத்தி வருகிறது. நாட்டு மக்கள்

ஒவ்வொருவரும் இந்தக் கொள்கையினுல் ஏற்படும் பயன்களை அனுபவிக்கிருர்கள். அரசாங்கம் கைக் கொண்டு வரும் இந்தக் கொள்கை தொடர்ந்து பெறும் வெற்றியில்தான் இந்நாட்டு மக்களின் வருங்கால வாழ்வும் சுபீட்சமும் தங்கியிருக்கின்ற தென்று கூறினுல் மிகையாகாது.

## நிலக் கொள்கை

**காணிகளைப் பொறுத்த வரையில் அரசாங்கம் கடைப் பிடித்துவரும் கொள்கை என்ன ?**

சுருங்கச் சொன்னுல், கிடைக்கும் காணிகள் முழுவதிலுமிருந்து அதிகபட்சமான பயனைப் பெற ஆன முயற்சிகள் யாவற்றையும் மேற்கொள்ளுவதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.

**இந்தக் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?**

அரிசி விநியோகத்தை அதிகரித்தல், வேலை கிடைக்க உதவுதல், கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டால் அதனை ஒழித்துக் கட்டுதல், கிராமங்களில் நிலமில்லாக் குறையைப் போக்குதல், ஆகியவையே அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கையின் நோக்கங்களாகும்.

**இந்த நோக்கங்களை நிறைவேற்ற அரசாங்கம் என்ன செய்கிறது ?**

(1) ஏற்கனவே நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றிராத நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற் படுத்திக் கொடுக்கிறது.

(2) இந்த நிலங்கள் இருக்கும் பகுதிகளில், ஜன நெருக்கம் மிகுந்த இடங்களில் வசிக்கும் குடியானவர்களைக் கொண்டு சென்று குடியேற்றுகிறது.

(3) ஏற்கனவே இருந்து வரும் கிராமங்களுக்கு அருகாமையில் இருக்கும் அரசாங்க காணிகளைக் குடியானவர்களுக்கு வழங்குவதன் மூலம் கிராம விஸ்தரிப்பில் ஆக்கங்காட்டுகிறது.

(4) நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இலங்கையர்களுக்குக் காணிகளை வழங்குவதன் மூலம் விவசாய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துகிறது.

**1947 ம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைமை தெரியாமல், சுதந்திரம் கிடைத்த பிறகு இலங்கை செய்துள்ள சாதனைகளைச் சரிவர மதிப்பிட்டுப் பெருமை கொள்வது சிரமமல்லவா ?**

ஆம், சுதந்திர அரசாங்கம் சமாளிக்க வேண்டியிருந்த பிரச்னைகள் பல. அவற்றைத் தீர்க்கக் கையாளப்பட்ட வழிவகைகள் மிகச் சாதுரியமானவை. இவற்றை யெல்லாம் தெரிந்து கொள்ள, 1947 ம் ஆண்டு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் இருந்த நிலைமையையும், 1947 தொடக்கம் 1954 வரையுள்ள நிலைமையையும் தெரிந்து கொள்வது அவசியம்தான்.

## பழைய கதை

1930—1947

1. **காணியைப் பராதீனப்படுத்தல்.** (முடிக்குரிய காணிகளைப் பொதுமக்களுக்கு வழங்குதல்)

பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்தில், முடிக்குரிய காணிகள், ஏல விற்பனை முறையில் ஆகக்கூடிய விலை கேட்பவருக்கு விற்கப்பட்டன. இலங்கையரும் இலங்கையரல்லாதாரும், போதிய பண வசதியுள்ளவர்களாக இருந்த பட்சத்தில், இந்தக் காணிகளை வாங்கி, தங்கள் சொந்த முதலைப் போட்டு இன்றுள்ள பெரிய தோட்டங்களை உருவாக்கினார்கள். இந்தக் கொள்கை கிராம மக்களுக்கு அதிருப்தியையும் கஷ்டத்தையும் அளித்தது. ஏனெனில் முடிக்குரிய காணிகளை வாங்கி வழக்கமான விவசாயத் துறையில் ஈடுபடுத்தவோ, கிராம விஸ்தரிப்புக்கு உபயோகப்படுத்தவோ அவர்களிடம் போதிய பண வசதியிருக்கவில்லை.

## இந்தக் கொள்கை எப்பொழுது மாறியது ?

1927 ம் ஆண்டில் காணிக்கமிஷன் இந்த ஏலவிற்பனை முறையை நிறுத்தி, பதிலாக ' தெரிவு ' முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. குத்தகையோ, நேரடி விற்பனையோ அல்லாத ஒரு வகைக் கட்டுப்பாடான காணியாட்சி முறையை ஏற்படுத்த வேண்டுமென இந்தக் கமிஷன் யோசனை கூறியது. இதன்படி முடிக்குரிய காணிகளைப் பிரித்து வழங்கும் திட்டமொன்றைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. குடியானவர்களுக்கே காணி விநியோகத்தில் அதிக சலுகை காட்டுவதென்பதும், முடிக்குரிய காணிகளின் அபிவிருத்தியில் அரசாங்கமே அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்பதும் இத்திட்டமாகும்.

காணிக்கமிஷன் சிபாரிசுகளின் கதி என்னவாயிற்று ?

1935 ம் வருடத்திய 19 ம் இலக்க காணி அபி விருத்திச் சட்டத்தில் இந்தச் சிபாரிசுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இந்தச் சட்டத்தில் கீழ்க்கண்ட விதிகளும் அடங்கின.

(அ) ஒரு கிராமத்திலிருக்கும் முடிக்குரிய காணி, கிராம விஸ்தரிப்புக்கும், கிராம மக்களின் தேவை களுக்கும் ஒதுக்கி வைக்கப்படவேண்டும்.

(ஆ) மேலதிகமாக முடிக்குரிய காணிகள் இருந் தால், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இலங்கையருக்கு அவற்றை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(இ) இதற்கும் மேலாக முடிக்குரிய காணிகள் எஞ்சி இருந்தால் அவற்றைப் பிறருக்கு விநியோகிக்கலாம்.

**அரசாங்கம் எந்த சமூகத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறதோ அந்தச் சமூகத்து மக்களுக்கே முடிக்குரிய காணிகள் சொந்தமானவை. நாட்டு மக்களின் அதிக பட்ச நன்மைக்கே இவை உபயோ கிக்கப்பட வேண்டும்.**

## 2 நீர்ப்பாசனம்.

### நீர்ப்பாசனத்தின் ' பழைய கதை ' என்ன ?

முற்காலத்தில், பூமியில் பொழியும் மழையின் ஒரு துளி கூட வீணாகி விடாமல், மழைநீர் கடலோடு கலக்குமுன்னர் அதை வழிமறித்துத் தேக்கி நீர்ப்

பாசனத்துக்கு உபயோகிப்பதைச் சிங்கள மன்னர்கள் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதன் பயனாகவே புராதன மன்னர்களின் மகத்தான நீர்ப் பாசன சாதனைகள் உருவாகின. பின்னர் அழிவு வந்தது. நீர்ப்பாசன வேலைகளே நிலைகுலைந்தன. ஏறத் தாழ 1850 ம் ஆண்டளவில் தான் இந்த அவகதி மேலும் அதிகரிக்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது. எனினும் இந்த நூற்றாண்டின் ஆரம் பத்தில்தான் திட்டமிட்ட நீர்ப்பாசனக் கொள்கை களைக் கடைப்பிடிக்க வழி பிறந்தது என்று சொல்லலாம். 1929 ம் ஆண்டிற்குள், நீர்ப்பாசன எஞ்சினியர்கள் பெரிய அளவில் ஆராய்ச்சிகளை நடத்திப் பல அரிய தகவல்களைக் கண்டு பிடித்தார்கள். கிராமங்களில் நீர்ப்பாசனத்தை மீண்டும் உறுதியான அடிப்படையில் உரு வாக்குவதற்கு அவர்கள் பலயோசனைகளைக் கூறினார்கள்.

1930 ம் ஆண்டளவில், சுயாட்சி இலங்கையில் ஏற் பட்ட ஆரம்ப காலத்தில், புதிய ஆட்சியாளர்கள் நீர்ப் பாசனத்துக்கு அதி முக்கியத்துவம் அளித்து, நீர் நிலைகளின் அபிவிருத்திக்கும், முக்கியமாக நெற்செய்கை யின் பிரயோசனத்துக்கும் நீண்ட காலத் திட்ட மொன்றை உருவாக்கினார்கள். நீர்ப்பாசன இலாகாவும் இலங்கையர் மயமாக்கப்பட்டது. **1930 ம் ஆண்டு முதல் 1947 ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட தெளிவான கொள்கையின் பயனாக, மக்களுக்குப் பயன் தரும் குளங்களையும் நீர் நிலைகளையும் புனருத்தாரணம் செய்யும் வேலைகள் ஆரம்பமாயின. இவற்றால் வரண்ட பிர தேசத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுபவம் ஏற்பட்டது.**

## 3. காணி அபிவிருத்தி

### 1930–1947 காலத்தில் பிரதானமாக வெளியான அனுபவ உண்மைகள் எவை ?

(அ) தேவையான முதல் இல்லாத காரணத்தால், குடியானவர்கள் தங்கள் காணிகளைப் பரிபூரணமாக உபயோகிக்க முடியாமல் இருந்தார்கள். எனவே அரசாங்க உதவி அவசியமாயிற்று.

(ஆ) தங்களுக்குக் கிடைத்த புதிய காணிகளைப் பண்படுத்தப் போதிய பண உதவி பெறுத நடுத்தர வர்க்க இலங்கையர்கள், காணிகளைப் பூரணமாகப் பயன்படுத்த அவர்களுக்குக் கடன் வசதிகள் தேவைப் பட்டன.

### கிராம விஸ்தரிப்புத் துறையில் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

பல வழிகளிலும் குடியானவர்களுக்கு இத்துறையில் உதவி செய்திருக்கிறது. வழங்கப்பட்ட உதவிகள் வருமாறு :—

**(அ) வீடமைப்பு மான்யம்.**

**(ஆ) கிணறு கட்டுவதற்கு மான்யம்.**

**(இ) மண்வள பாதுகாப்புக்கும், மலஜலகூட அமைப் புக்குமான மான்யம்.**

**(ஈ) இலவச விதை, தானியம், கன்றுகள் முதலியன.**

**வரண்ட பிரதேசங்களில் குடியேறி வாழ்பவர்களுக்கு இந்த உதவிகள் மட்டும் செய்தால் போதுமா ?**

இல்லை. வீதிகள், போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள், புனருத்தாரணம் செய்யப்பட்ட நீர் நிலைகள், பாடசாலைகள், வைத்திய வசதிகள், வர்த்தக வியாபார, கூட்டுறவுக் கடன் வசதிகள் முதலியனவும் இவர்களுக்கு அவசியம்.

**காணிகளைப் பாவனைக்கு உகந்தவையாக்குவது யார் பொறுப்பு ?**

அரசாங்கம் இந்தப் பொறுப்பைத் தன் செலவில் ஏற்றிருக்கிறது. ஆனால், காணிகளிலுள்ள முளைகளைக் களைதல், வரம்பு கட்டுதல் ; குடியேற்றக்காரருக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ளுதல் ஆகியவை, குடியேறுபவர்களின் பொறுப்பு. விதை தானியமும் விதைப்பு உபகரணங்களும் வாங்கிக்கொள்ள வேண்டியதும் குடியேறும் குடியானவர்தான். மூன்று வருடங்களுக்கு இக்குடியானவர்களுக்கு நீர்ப்பாசன வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**சுகாதார வசதிகள் என்ன செய்யப்பட்டிருக்கின்றன ?**

மலேரியாவைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும், அரசாங்க ஆஸ்பத்திரிகளை நிறுவவும், வீதிகள்–வடிகால்கள் அமைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

## யுத்த காலத்தில்

1939 ம் ஆண்டில் உலக மகாயுத்தம் ஏற்பட்டதும் காணி அபிவிருத்தியும் அதிக திருத்தங்களுடன் துரிதப்

# குடியேற்றத் திட்ட அபிவிருத்தி

1 வது ஆறு வருடத்திட்டம்: 1948–54

2 வது ஆறு வருடத்திட்டம் :1955–61


முதல் ஆறு வருடத்திட்ட காலத்தில் கட்டப்பட்ட குடியேற்ற வீடுகளை 30 யார் இடை வெளிக் கொன்றாக வரிசைப்படுத்தி வைத்தால், அவற்றின் நீளம், கொழும்பிலிருந்து ஆனையிறவு வரையுமுள்ள கரையோரப் பாதையின் நீளத்துக்குச் சமமாகும்.

இரண்டாவது ஆறுவருடத் திட்ட காலத்திலோ (இது இலங்கையின் சுற்றளவு நீளத்துக்குச் சமமாகும்.

வீடுகள்
- 1 வது ஆறு வருடத் திட்டம்: 13,811 வீடுகள் கட்டிமுடிந்தன.
- 2 வது ஆறு வருடத் திட்டம்: 28,969 வீடுகள் கட்டப்படும்.

காணி அபிவிருத்தி
- 1 வது ஆறு வருடம்: 88,760 ஏக்கர் நிலம் திருத்தப்பட்டது.
- 2 வது ஆறு வருடம் : 1,57,979 ஏக்கர் நிலம் திருத்தப்படும்.

குடியேற்றம்
- 1 வது ஆறு வருடம் : சுமார் 82,866 பேர் குடியேறினர்.
- 2 வது ஆறு வருடம் : 173,814 பேர் குடியேறுவர்.



படுத்தப்பட்டது. ஏனெனில் உணவுற்பத்தியைப் பெருக்குவது அப்பொழுது அத்தியாவசியமாயிற்று. எனவே காணி அபிவிருத்தியையும் குடியேற்றத் திட்டத்தையும் மென்மேலும் வளர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. நீர்ப்பாசனத் திட்டப் புனருத்தாரணத்துக்குச் செலவாகும் பணத்தின் பயனை உணவு உருவத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாகத் திரும்பப் பெறுவதற்கு அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டது.

**குடியேற்றத் திட்டத்தைத் துரிதப்படுத்த எடுக்கப்பட்ட விசேஷ நடவடிக்கைகள் யாவை ?** குடியேற விரும்பும் மக்களுக்கு அதிக வசதிகளை பிரத்தியேகமாகச் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வந்தது. இந்தப் பிரத்தியேக வசதிகளாவன :—

(1) குடியேறும் நபருக்கும் அவர் குடும்பத்துக்கும் ஒரு தனி வீடு அளிக்கப்பட்டது.

(2) காணியைத் திருத்தும் பொறுப்பைத் தொடர்ந்து அரசாங்கம் ஏற்றது. முதல் அறுவடை முடிந்து காணியில் முளை களையவும் வரம்பு கட்டவும் அரசாங்கம் மான்யம் வழங்கியது.

(3) குடியானவர் தன்னைத் தானே தாபரிக்கும் நிலைக்கு வரக் கூடியதாக அரசாங்கம் சிறிய அளவு வாழ்க்கைப்படிச் செலவு உதவியது.

(4) விவசாய உபகரணங்களும் எருதுகளும் குடியானவர்களுக்கு இரவலாக வழங்கப்பட்டன. தமக்குக் கிடைத்த காணிகளை நன்கு பயன்படுத்திக் கொண்டவர்களுக்கு இவை உபகரிக்கப்பட்டன. குடியானவர்

பெற்ற நெற்காணியையும் மேட்டுக் காணியையும் நன்கு பயன்படுத்திக் கொண்டதனுலேயே இந்த உபகரிப்பு வழங்கப்பட்டது.

(5) குடியானவர் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்ய வசதிகள் அளிக்கப்பட்டன.

(6) குடியானவர், அவருக்கு வழங்கப்பட்ட காணியில் குடியேறுவதற்கு முன்பே, அவர் வசிப்பதற்கான வீட்டைக் கட்டி முடித்து, நெற் காணியில் வரம்பு கட்டி சகல அலுவல்களையும் தயாராக வைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டது.

**இந்தத் தூண்டுதல்கள் இருந்தும், சுகாதாரமற்ற பகுதிகளுக்குப் போவதில் குடியானவர்கள் தயக்கம் காட்டியிருப்பார்கள் அல்லவா ?**

1945 ம் ஆண்டு வரை, மலேரியா அபாயத்தால் வரண்ட பிரதேசக் குடியேற்றத் திட்டங்கள் பாதிக்கப் பட்டிருந்தன என்பது உண்மைதான். 1945 ல் டி. டி. ரி. மருந்தின் உதவியோடு அனுராதபுரப் பகுதிகளில் சுகாதாரப் பகுதி மலேரியாக் காய்ச்சலை ஒழித்துக் கட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறது. பெரிய அளவில் மலேரியா ஒழிப்பு இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நாடெங்கும் விஸ்தரிக்கப்பட்டது. இன்று மலேரியா அநேகமாக இலங்கை மண்ணிலிருந்தே துடைத்தெறியப் பட்டுவிட்டது. வரண்ட பிரதேச வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்து வந்த ஒரு பெரிய தடை இதனுல் அறவே அகன்றுவிட்டது.

## சுதந்திரம் பெற்ற பின்னர்

**காணி அபிவிருத்தி தங்கு தடையின்றி மிகவேகமாக வளர்ந்து வந்திருக்கிறதென்பது தெரிகிறது. எனவே சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றி ஏராளமான கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது. சரி! முதலில் எங்கு ஆரம்பிக்கலாம்?**

காணி அபிவிருத்தி ஏணிப்படிபோல் ஒழுங்காக உயர்ந்து செல்கிறது. நில அளவைப் பகுதியிலிருந்து இதன் வளர்ச்சியை ஆரம்பிக்கலாம். நில அளவைப் பகுதி முதலில் நில மேற்பார்வையை நடத்துகிறது. அப்புறம் காணியுரிமை நிர்ணய இலாகா முடிக்குரிய காணிகள் எவை, தனிப்பட்ட காணிகள் எவை என்று நிர்ணயிக்கிறது. காணி அபிவிருத்தி இலாகா முடிக்குரிய காணிகளின் அபிவிருத்தியிலேயே சிரத்தை கொண்டிருப்பதால் அவற்றின் எல்லைகளை நிர்ணயிப்பது அவசியமாகிறது. இந்த இலாகாக்களைத் தொடர்ந்து நீர்ப்பாசன இலாகா, காணி அபிவிருத்தி இலாகா வனபரிபாலன இலாகா போன்றவையும் காணி அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. காணிகளை விநியோகிக்கும் திட்டமும் காணி அபிவிருத்தியோடு சேர்ந்ததுதான்.

### 1. நீர்ப்பாசனம்

**நீர்ப்பாசனத்துடன் கேள்விகளை ஆரம்பிக்கலாம். நீர்ப்பாசனத் துறையில் உண்மையான நடவடிக்கைகள் ஆரம்பமானது 1930 ம் ஆண்டில்தான்; அல்லவா?**

ஆம், இலங்கை சுதந்திரப் பாதையில் நடை போடத் தொடங்கிய அந்தக் காலத்தில் தான்

கிராமங்களின் வாழ்வும் தாழ்வும் நீர்ப்பாசனத்தி லேயே தங்கியிருக்கின்றதென்ற விழிப்புணர்ச்சி ஏற் பட்டது. 1930 க்கும் 1947 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிராம வாழ்வின் புனருத்தாரணத்திலேயே அதிக சிரத்தை காண்பிக்கப்பட்டது. இதன் காரண மாக, நீர்ப்பாசனத் துறையில், அதிக பணம் செலவிடப்பட்டது கிராம நீர்நிலைகளின் புனருத்தாரணத் துக்கும் திருத்தத்துக்கும் அபிவிருத்திக்குமே.

**சுதந்திரம் பெற்ற பின்னர் செயற்படுத்தப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் கிராம நீர்நிலைகளின் புனருத்தாரண காலம் பெரிதும் உதவி புரிந்ததென்று கூறுவது எவ்வளவு தூரம் உண்மை ?**

கிராமப் புறங்களிலுள்ள குளங்கள், மற்றும் நீர் நிலைகள் ஆகியவற்றின் புனருத்தாரண வேலை கள், நம்நாட்டவர்கள் இத்துறையில் பயிற்சியும் அனுபவமும் அறிவும் பெற உதவின. எங்கள் புராதன நீர்ப்பாசனத் திட்டங்களின் மீது மக்களின் கவனம் விழுவதற்கும் அவை காரணமாயிருந்தன. புராதன குளக் கட்டுத் திட்டமும் எங்கள் கலா சாரத்தில் எவ்வளவு பிரதான அம்சமாக விளங் கிற்று என்பதை மக்கள் அதிகமதிகமாக உணர்ந்து கொள்ள ஆரம்பித்தற்கு அவை உதவின. கிராம மக்களுக்கு சுகாதாரமும் சமூக வித்தியா சேவை களும் மற்றும் தேவைகளும் எவ்வளவு அவசிய மென்பது உணரப்பட்டது கிராம நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் தான். இதே காலத்தில், கிராம நீர்ப்பாசனத் திட்டங்கள் தவிர வரண்ட

பிரதேசத்துக்கான விஸ்தாரமான திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டதால், இத்துறையிலும் அதிக அனுபவம் பெறப்பட்டது.

**கிராமங்களில் ஆரம்பிக்காமல், பாரிய திட்டங்களை ஒரேயடியாக ஆரம்பித்திருக்கலாமே! ஏன் அப்படிச் செய்யவில்லை ?**

இலங்கைத் தாயின் இருதயத்தில், அதாவது கிராமத்தில், அபிவிருத்தி வேலைகளை அரசாங்கம் ஆரம்பித்தது மிகச் சரி. கிராமங்களில் நீர் நிலை வசதிகளைப் பெருக்கியதன் மூலம் தொடர்ந்து நடைமுறைக்கு வரவிருந்த பாரிய திட்டங்களுக்குத் தகுந்த அஸ்திவாரமிடப்பட்டது. மின்னேரியாவில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற ஆரம்ப காலத் திட்டங்கள் சில முதலில் சொற்ப சங்கடங்களுக்கு இலக்கான போதிலும், அவற்றின் மூலம் பெற்ற அனுபவம் இறுதியில் குடியேற்றத் திட்டங்கள் பரிபூரண வெற்றி பெற உதவியது.

**சுதந்திரம் பெற்ற பின்னர் வரண்ட பிரதேசங்களில் ஏற்பட்ட மகத்தான அபிவிருத்திக்கு 1930க்கும் 1947க்குமிடையில் கிடைத்த அனுபவமே காரணமாகும்.**

**முதல் ஆறுவருடத்திட்டத்தில் (1947–1953) இடம்பெற்ற பிரதான நீர்ப்பாசனத் திட்டங்கள் எவை ?**


(1) பராக்கிரம சமுத்திரத் திட்டம்.

(2) மின்னேரித் திட்டம் II ம், III ம் பகுதிகள்.

(3) காகமை விஸ்தரிப்புத் திட்டம்.

# நீர்ப்பாசன அபிவிருத்தி

1929–1930 தொடக்கம்



(4) நுவரவேவை விஸ்தரிப்புத் திட்டம்.

(5) மினிப்பே திட்டம்—II ம் III ம் பகுதிகள்.

(6) ரிதிபெந்தி எலேத் திட்டம்.

(7) கல்லோயாத் திட்டம்.

(8) கந்தளாய் விஸ்தரிப்புத் திட்டம்.

(9) அல்லே விஸ்தரிப்புத் திட்டம்.

(10) ஹுருளுவேவைத் திட்டம்.

**இத்திட்டங்களின் குறிக்கோள் என்ன ?**

குறித்த ஆறு வருட காலத்தில் பிரதி வருடமும் 20,000 எக்கர் புதிய காணிகளில் விவசாயம் செய்தலே இத்திட்டங்களின் குறிக்கோள். இக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டது.

**சுதந்திரம் பெற்ற பின்னர் பிரதானமான கொள்கை மாற்றம் எதுவும் ஏற்பட்டதா ?**

பொதுவான நீர்ப்பாசனக் கொள்கை அநேகமாக அப்படியே இருந்ததெனினும், அது புதிய விஸ்தாரமான அளவில் கடைப்பிடிக்கப்பட்டது. கிராம நீர்ப்பாசானம், நடுத்தர நீர்ப்பாசானம் என்ற அளவில் நின்றுவிடாது. பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் கைக்கொள்ளப்பட்டன.

**முதல் ஆறுவருட காலத் திட்டத்தின் மிகப் பெரிய சாதனை எது ?**

**கல்லோயா நானுவித அபிவிருத்தித் திட்ட அமைப்பும், திட்ட நிறைவேற்றமுமே முதலாறு வருடத்திட்டத்தின்**

மகத்தான சாதனை என்று சொல்லலாம். சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை செய்த மிகப் பெருஞ் சாதனை என்றும் இதைச் சொல்லுவதற்கு இடமுண்டு.

**இந்தத் திட்டம் உருவான விதத்தைத் தெரிவிக்க முடியுமா ?**

பட்டிப்பளை ஆற்றுப் பிரதேசத்தில், 30,000 சொச்ச எக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக நீர்ப்பாசன இலாகா இந்தத்திட்ட யோசனையைக் கொண்டு வந்தது. அப்பிரதேசத்தில் நிலவிய வெள்ளப் பிரச்னையைத் தீர்ப்பதுடன் நீர்ப்பாசனத்தை அதிகரிக்கவும் இந்தத் திட்டம் உதவுமெனக் கருதியே இலாகா இந்த யோசனையைச் சமர்ப்பித்தது. இத்திட்டத்தின் மூலம் தேக்கத்துக்கு வரும் நீரின் உதவியால் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமென்பதையும் இலாகாகண்டு கொண்டது. இந்த வகையில், கல்லோயா திட்டம் என்று இன்று அழைக்கப்படும் நாலுவித நோக்கத் திட்டம் உருவாகியது. 120,000 எக்கர் நிலத்துக்கு நீர் பாய்ச்சவும், வெள்ள அபாயத்தைத் தவிர்க்கவும், 10,000 "குதிரைச்சக்தி" மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் கல்லோயாத் திட்டம் தற்போது பயன்படுகிறது.

**முதலாவது வருடத் திட்டகாலத்தில் அடைந்த அபிவிருத்தியின் அளவு என்ன ?**

மேற்புற வேலைகள் முடிவடைந்து விட்டன. இடப் புறக் கரையில் 36,250 எக்கர்களை உள்ளடக்கக் கூடிய விதத்தில் 30 மைல் நீளத்துக்கு பிரதான கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது.

**கல்லோயாத்திட்ட அபிவிருத்திக்குச் காரணஸ்தர் யார் ?**

மேற்புற வேலைகளையும், இடது பக்கக் கரைக் கால்வாய் வேலைகளையும் செய்து முடித்த பெருமை நீர்ப்பாசன இலாகா டைரக்டரைச் சாரும். வெளி நாட்டுக் கொந்தருத்துக் கம்பனி ஒன்றிலிருந்து உதவி பெற்று, இவ்வேலைகளை அவர் செய்து முடித்தார்.

மேற்புற வேலைகள் முடிவடையும் தறுவாயில், கல்லோயாப் பள்ளத்தாக்கில் அபிவிருத்தியைக் கவனிக்க நியமிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்திச் சபை, திட்ட வேலைகளின் பொறுப்பை ஏற்றது.

**கல்லோயாத் திட்டத்தின் பிரதான நீர்த்தேக்கம் சேனநாயகா சமுத்திரமாகும். இதன் பரப்பளவு 770,000 ஏக்கர் அடிகள்.**

**எந்த வகையான விவசாயத்தை கல்லோயா அபிவிருத்திச்சபை விருத்தி செய்ய வேண்டியிருந்தது ?**

பிரதானமாக குடியானவர் விவசாயத்தைச் சபை விருத்தி செய்ய வேண்டியிருந்தது.

**1950–54 காலத்தில் கல்லோயாத் திட்டத்தின் கீழ் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது ?**

| | ஏக்கர் |
|---|---|
| இக்காலத்தில் குடியானவர் வசிப்பதற்கெனத் திருத்தித் தயாரிக்கப்பட்ட காணிகளின் அளவு | 11,588 |

| | |
|---|---|
| விவசாயத்துக்குத் தயாரிக்கப்பட்ட நீர்ப் பாய்ச்சக் கூடிய காணிகள் .. | எக்கர் 16,305 |
| ஜன் சமூக காரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் .. .. | 14,419 |
| குடியானவர்கள் குடியேறிய காணிகள் .. | 4,165 |

**கல்லோயாத் திட்டம் தவிர வேறும் சிறிய, பெரிய திட்டங்கள் பல இருக்கின்றனவே! முதலாறுவருட திட்டத்தில் இவற்றில் நீர்ப்பாசன வசதிகள் பெற்ற காணிகளின் அளவு என்ன ?**

பெரிய திட்டங்கள் .. 56,036 எக்கர் நெற்காணி

சிறிய திட்டங்கள் .. 73,559 எக்கர் காணி.

சிறிய திட்டங்களின் கீழ் இவ்வளவு தொகையான எக்கர் காணியில் நீர்ப்பாசன வசதி கவனிக்கப் பட்டிருப்பதானது, பெரிய குடியேற்றத் திட்டங்களில் ஈடுபட்டிருந்த அதே வேளையில், நீர்ப்பாசன இலாகா கிராமப் பகுதித் தேவைகளைக் கவனித்துத் தவற வில்லை என்பதற்கு அத்தாட்சியாகும்.

**முதல் ஆறுவருட திட்டகாலத்தில் நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் எவை ?**

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், திட்டமிடும் வேலைகளில் காலதாமதம் கூடாது என்பது முதலாறு வருட திட்ட அனுபவத்தில் பெற்ற பாடமாகும். பரீட்சார்த்தத்தில் ஈடுபட்டிருக்கும் அதே சமயம்

திட்டங்களை அமுல்நடத்துவதிலும் நாம் கவனஞ் செலுத்தி வந்திருக்கிறோம். குறிப்பிட்ட குறிக்கோளின் பிரகாரம் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் உள்ள பெறுமதியையும், குறிக்கோளை நிறைவேற்ற அவசிய மான பணத்தைத் தாமதமின்றி ஒதுக்க வேண்டிய தன் அவசியத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம்.

**தற்போதைய இரண்டாவது ஆறுவருடத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள பிரதான அம்சங்கள் என்ன ?**

முதலாறு வருட திட்ட காலத்தில் ஆரம்பிக்கப் பட்ட பல திட்டங்கள் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்படும். உதாரணமாக, அடுத்த ஆருவருட காலத்தில், பிரதி வருடமும் கல்லோயாத் திட்டத்தின் கீழ் 10,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதியுள்ள காணி களைத் திருத்தித் தயாராக்குவதெனத் திட்டமிடப் பட்டிருக்கிறது. வேறு திட்டங்களின் மூலம் வருடாந் தம் 13,000 ஏக்கர் காணிகள் திருத்தி உபயோகத் துக்குத் தயாராக்கப்படும். முதலாவது வருடத் திட்டத்தின் தொடர்ச்சியாக இவ்வேலைகளில் சில அமையும்

**வருடாந்தம் 23,000 ஏக்கர் நீர்ப்பாசனக் காணிகளில் விவ சாயம் செய்வதென்பது இரண்டாவது ஆறு வருடத் திட்டத்தின் குறிக்கோளாகும்.**

**இரண்டாவது ஆறு வருடத்திட்டத்தின் கீழ் உள்ள புதிய திட்டங்கள் யாவை ?**

பதவியா திட்டம் ; பாவற்குளத் திட்டம் ;

வளவைத் திட்டம்.

அனுராதபுரத்துக்கு மேற்கே மகாவிலாச்சியா குளத்தைப் புனருத்தாரணம் செய்தல். சிலாபத்தைச் சுற்றியுள்ள தொகையான மக்களின் உபயோகத்துக்காக கட்டுப்பொத்தைக் குளத்திலிலிருந்து கால்வாய் அமைத்தல்.

**நீர்ப்பாசனத் துறையில் எங்கள் திட்டம் பாராட்டத்தக்கதாய் அமைந்திருக்கிறதா ?**

முன்பெல்லாம் நீர் நிலைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு நோக்கத்தை மட்டுமே கொண்டு கடைப்பிடிக்கப்பட்டன. இன்றோ, நீர்ப்பாசனம், நில அபிவிருத்தி ஆகியவற்றுக்கு மட்டுமன்றி வெள்ளத்தடுப்பு, வன பரிபாலனம், மண்வளப்பாதுகாப்பு போன்ற நானுபயன்களைத் தரக்கூடியவாறு நீர்ப்பாசனத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு பகுதியின் அபிவிருத்திக்கு, அப்பகுதியின் பிரச்னைகளில் பலவற்றைத் தீர்க்கக் கூடிய ஒரே திட்டம் இருத்தல் அவசியம். இந்தத்திட்டமும் முறையே நாடுமுழுவதற்கும் பொதுவான அபிவிருத்தித் திட்டமொன்றின் ஒரு அங்கமாக இருத்தல் வேண்டும்.

**நீர்ப்பாசன அபிவிருத்திக்கு மிகச்சிறந்த ஸ்தலம் எது ?**

நீர்நிலைத் திட்டங்களுக்கு ஆற்றுப் படுக்கைகள் தான் மிகச் சிறந்தவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை.

### 2. நிலத்தை அபிவிருத்தி செய்தல்

**நில அபிவிருத்தியில் அதிக முன்னேற்றம் எந்த வருடத்தில் காணப்பட்டது ?**

சிறிது பின்னோக்கிச் சென்று இதற்குப்பதிலை ஆராயலாம். 1932 ல் அரசாங்க உதவியுடன் குடியேற்றத் திட்டம்

## 1954 ம் ஆண்டு முதல் 1960 ம் ஆண்டுவரையுள்ள இரண்டாவது ஆறுவருடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான வேலைத்திட்டங்கள்


| திட்டத்தின் பெயர் | நீர்ப்பாய்ச் சக்கூடிய பிரதேசம்—ஏக்கர்களில் | மதிப்பிடப்பட் டுள்ள செலவு ரூபாய் களில் | |
|---|---|---|---|
| 1. கல்லோயாத் திட்டம் | 120,000 | 133,000,000 | |
| 2. கந்தளாய் அபி விருத்தித் திட் டம் | 19,000 | 19,500,000 | |
| 3. அல்லை விஸ்தரிப் புத் திட்டம் | 13,000 | 14,119,000 | |
| 4. ஹுருலுவேவா திட்டம் | 8,000 | 11,200,000 | |
| 5. இரணைமடு விஸ் தரிப்புத் திட்டம் | 5,000 | 5,250,000 | |
| 6. பதவியத்திட்டம் | 14,000 | 14,800,000 | |
| 7. பாவற்குளத் திட்டம் | 4,500 | 7,350,000 | |
| 8. கந்தலமைத் திட்டம் | 4,000 | 5,490,000 | |

ஆரம்பிக்கப்பட்டது. அப்போதுதான் குடியேற்றத் திட்டத்துக்கு அரசாங்கம் உதவிபுரியும் என்னும் கொள்கையை அப்பொழுது விவசாய, நில அபிவிருத்தி மந்திரியாக இருந்த காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா சட்ட சபையில் அறிவித்தார். படிப்படியாக குடியேற்றத் திட்டத்துக்கு அரசாங்க உதவி அதிகரிக்கப்பட்டு வந்தது. இந்த உதவி 1952 ல் உச்சக்கட்டத்தை அடைந்தது. அந்த வருடத்தில் குடியேறிய குடியானவர்கள் பல வாசதிகளைப் பெற்றார்கள். குடியேறும் காணி, விவசாயத்துக்குத் தயாராகப் பக்குவப்படுத்தப்பட்டு, சௌகரியமான வீட்டு வசதிகளுடன் விளங்கியது. குடியேற்றப் பகுதிகளில் பொது வாழ்வு வசதிகளும், நிதிவசதிகளும் பிரஜா சேமாபிவிருத்தி சௌகரியங்களும் கிடைக்கச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

**சுதந்திரம் கிடைத்த பின்னர், எல்லா அபிவிருத்தி அலுவல்களும் துரிதமாக நடைபெற ஆரம்பித்தன என்று சொல்லலாம் அல்லவா ?**

அப்படிச் செல்வது சரியானது தான். ஏனெனில் இலங்கைக்குப் பூரண சுயாட்சி கிடைத்த சமயத்தில் தான் அரசாங்கம் முதலாவது ஆறுவருடத்திட்ட அபிவிருத்தி முறையையும், கூட்டுறவு விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க ஸ்தாபிதத்தையும் அறிவித்தது. 1948 ல் தான் விவசாய விளைபொருட்களுக்கான உத்தரவாத விலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. காணி அபிவிருத்தி இலாகா நிறுவப்பட்டதும் இதே சமயத்தில் தான். காடுகளைத் திருத்தி, காணிகளை விவசாயத்துக்குத் தயாராக்குவதோடு குடியேறும் குடியானவர்களுக்கு வீடுகள் அமைப்பதும்,

# குடியேற்றத் திட்டங்களின் வளர்ச்சி




இவ்வடையாளம் ஒன்று, 1,000 குடும்பங்களுக்கு
(அதாவது சுமார் 6,000 பேருக்கு) சமம்.

பொதுக் கட்டிடங்களை குடியேற்ற பிரதேசங்களில் நிறுவுவதும் இந்தப் புதிய காணி அபிவிருதி இலாகவின் கடமைகளாயின்.

**இப்படிப் பார்க்கிறபோது அரசாங்க குடியேற்றத் திட்டத்தை 1931 ம் ஆண்டுக்குப் பிறகு மூன்று காலங்களாகப் பிரிக்கலாம்; அல்லவா?**

ஆம். 1931–1947 காலம் குடியேற்றத்திட்டத்தின் பூர்வாங்க காலமாக அமைநதது. திட்ட வளர்ச்சிக்காலம் 1948–1954. 1954 க்கும் 1960 க்கும் இடைப்பட்ட காலத்தை வருங்காலத்திட்ட நிறைவேற்றகாலமென்று குறிப்பிடலாம்.

**முதலாறு வருடத் திட்ட காலத்தில் காணி அபிவிருத்தி இலாகா இட்ட திட்டப்பிரகாரம் தன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்றதா ?**

63,937 ஏக்கர்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற குறிக்கோளை நிறைவேற்றியது மட்டுமன்றி, திட்டத்தில் முன்னர் சேர்த்துக் கொள்ளப்படாத பகுதிகளைச் சேர்ந்த சுமார், 12,000 ஏக்கர் மேலதிக காணிகளையும் இலாகா அபிவிருத்தி செய்தது.

**1947–1953 காலத்தில் நெற்செய்கை, தோட்டச் செய்கை ஆகிய துறைகளில் அடைந்த சாதனைகளின் சரியான மதிப்பீட்டை தெரிவிக்க முடியுமா ?**

மொத்தம் 75,205 ஏக்கர் காணியில் இச்செய்கைகள் நடைபெற்றன. இதில் 47,382 ஏக்கரில் நெல்லும் மீதி 27,823 ஏக்கரில் தோட்டப்பயிர்களும் பயிரிடப்பட்டன.

முதலாறுவருடத்திட்டத்தில் சேராத 1953-54 நிதி வருடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்ட காணிகளின் அளவென்ன ?

| | | ஏக்கர் |
|---|---|---|
| நெற்செய்கை | .. | 8,652 |
| தோட்டச் செய்கை | .. | 4,902 |
| மொத்தம் | .. | 13,554 |

காணி அபிவிருத்தி இலாகா 1948 ல் ஆரம்பிக்கப் பட்டது தொடக்கம் இதுவரை வரண்ட பிரதேசத்தில் செய்துள்ள வேலைகள் என்ன ?

குடியேறுபவர்களுக்கு விநியோகிப்பதற்கென 88,760 ஏக்கர் காணி தயாரிக்கப்பட்டது.

பொதுத் தேவைகளுக்கும், வீதி அமைப்பு, விளையாட்டு வசதிகளுக்கும் 8,000 ஏக்கர் காணி அபிவிருத்தி செய்யப்பட்டது.

13,500 குடியேற்ற குடும்பங்களுக்கு (சுமார் 75,000 தொடக்கம் 80,000 வரையுள்ள பேருக்கு) நிரந்தர வசிப்பிடம் வழங்கப்பட்டது.

இரண்டாவது ஆறுவருடத் திட்டத்தின் கீழ் காணி அபி விருத்தி இலாகா செய்யவேண்டியதென்ன ?

1954 ம் வருடம் அக்டோபர் மாதம் 1 ந் திகதிக்கும் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் (கல்லோயா தவிர்ந்த) குடியேற்ற, கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள் பலவற்றின் கீழ் சுமார்


158,000 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்வதெனத் திட்டம்மிடப்பட்டிருக்கிறது. இலங்கையில ஜன நெருக்கடி மிகுந்துள்ள பகுதிகளிலிருந்து சுமார் 30,000 குடும்பங்களை வேறு பகுதிகளில் குடியேற்றுவதெனவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் குறைந்தது 150,000 மக்களின் வாழ்க்கைத்தரம்| உயரும். சுமார் 25,000 பேருக்கு பல துறைகளிலும் வேலை கிடைக்கும். இத்துடன், மேட்டு நிலக்குடியேற்றத் திட்டத்தின் கீழ் 25,000 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**இரண்டாவது ஆறுவருடத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவிருக்கும் காணியின் அளவு, முதலாறுவருடத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட காணியின் அளவைப்போல இரண்டு மடங்குக்கும் அதிகமாகும்.**

## மேட்டுநிலக் குடியேற்றத் திட்டமென்றால் என்ன ?

குளிர்ந்த பிரதேசத்தில், ஜனப் பெருக்கம் மிகுந்த பகுதிகளில் உள்ள முடிக்குரிய காணிகளில் பெரும் பாலானவை ஏற்கனவே விநியோகமாகி விட்டன. எஞ்சியிருப்பது சுமார் 100,000 ஏக்கர் மேட்டு நிலங்கள் மட்டுமே. பஸ்துன் கோரளைக்கும் மொரவாக் கோரளைக்கும் இடையிலும், சப்ரகமுவா பகுதியிலும் ஊவா பகுதியிலும் இவை இருக்கின்றன. இவற்றைப்பாவனைக்குக் கொண்டு வருவது மிகச் சிரமம். இப்பகுதிகளை அடைவது கஷ்டம். மழை வீழ்ச்சி மிக அதிகம். வீதி அமைப்பது பெருஞ் செலவு. எனவே பரீட்சார்த்தமாக அரசாங்க, தேயிலை, ரப்பர், தென்னை முதலிய வர்த்தக விளை பொருட்களை உற்பத்தி செய்வதற்காக மேட்டு நிலக்குடியேற்றத் திட்டங்களை, அதாவது மலை நாட்டுக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்திருக்கிறது.

## கிராம விஸ்தரிப்புத் திட்டங்களின் மான்யத்தில் வீடுகள் அமைத்தல்




இவ்வடையாளம் ஒன்று, 1,000 வீடுகளுக்கு—சுமார் 6,000 பேரின் வசிப்பிட வசதிக்கு—சமமாகும.

**இந்தத் திட்ட அம்சங்கள் எவை ?**

வீட்டு வசதிகள், திருத்தப்பட்ட காணிகள் முதலியவை, மேட்டு நிலங்களில் வந்து குடியேறுபவர்களுக்கு அளிக்கப்படும். ஜனநெருக்கடி மிகுந்த பகுதிகளிலிருந்து வந்து குடியேறும் இவர்கள், மேட்டு நிலங்களில் வர்த்தக விளைபொருள்களை உற்பத்தி செய்யச் சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும்.

**எத்தனை குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் குடியேற்றப்படவிருக்கின்றன ?**

இரண்டாவது ஆறுவருடதிட்டக் காலத்தில் வருடாந்தம் சுமார் 1,500 குடும்பங்களைக் குடியேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## 3. முடிக்குரிய காணிகளின் விநியோகம்

**சுதந்திரம் பெற்ற பின்னர், முடிக்குரிய காணிகளை விநியோகிப்பதில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைக் கொள்கை என்ன ?**

1935 ம் வருடத்திய 19 ம் இலக்க காணி அபிவிருத்திச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் கொள்கைப்படியே முடிக்குரிய காணிகள் வழங்கப் படுகின்றன. குறிப்பிட்ட குடியேற்ற பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கே முடிக்குரிய காணிகளை வழங்குவதில் முதற்சலுகை காட்டப்படுகிறது. அத்துடன் முடிக்குரிய காணிகளை அபிவிருத்தி செய்வதில் அதிகபட்ச அக்கறை அரசாங்கத்தினாலேயே காண்பிக்கப்படுகிறது.

**கிராமங்களுக்கு எவ்விதத்தில் உதவி கிடைக்கிறது ?**

கிராமங்களுக்குச் சமீபமாக இருக்கும்' திருத்தப்படாத முடிக்குரிய காணிகளே பெரும் பாலும் குடியேற்ற திட்டத் துக்கெனத் தெரிந்தெடுக்கப் படுகின்றன. ஒவ்வொரு குடி யானவருக்கும் சுமார் ஒரு ஏக்கர் காணி வழங்கப்படு கிறது. மேட்டுநிலமானல், வீடு மலஜல கூடம்–கிணறு முதலியவற்றைக் கட்டும் செலவில் பாதி அரசாங்கத்தி னல் குடியானவருக்கு வழங்கப் படுகிறது.

**மான்யக் கணக்குகளின் உண்மை விபரம் யாது ?**

வீடு ஒன்றுக்கு 700 ரூபாய் ஒரு கிணற்றுக்கு ரூபாய் 300 முதல் ரூபாய் 400 வரை. மல ஜலகூடம் ஒன்றுக்கு ரூபாய் 75. இவை தவிர தனக்குக்கிடைத்த காணியின் மண்வளப் பாதுகாப்புக்கென குடியானவர் மான்யங்கள் பெறவும் உரிமையுண்டு. இடையிடையே அரசாங்கம் ஒட் டுமா, பழ மரங்கள் போன்ற விதை பொருட்களைக் கொடுத்து உதவுகிறது.

**விநியோகத்துக்கெனவுள்ள முடிக்குரிய காணிகள் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே உள்ளன ; இல்லையா ?**

குளிர்ந்த பிரதேசங்களின் சில பகுதிகளில், முக்கிய மாக தேயிலை ரப்பர் தோட்டங்கள் உள்ள பகுதிகளில் நிலைமை அப்படித்தான் இப்பகுதிகளில் தனிப்பட்டவர் களிடமிருந்து சிறிய காணிகளை வாங்கி கிராம மக்கள் குடி யேறி வசிப்பதற்கென வழங்கும் கொள்கையை அரசாங் கம் கடைபிடித்து வருகிறது. காணி அபிவிருத்திச் சட்டத்

தின் கீழ் காணி பெறுபவர்களுக்குக் கிடைக்கும் மான்ய வசதிகள் இந்த வசிப்பிடக் காணிகளைப் பெறுபவர்களுக்கும் அளிக்கப் படுகின்றன.

**நிலத்துக்கு இப்பொழுது அதிக கிராக்கி இருந்து வருகிற தென்பது உண்மையா ?**

வரண்ட பிரதேசத்துப் பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கு கிராக்கி இருந்து வருகிறது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமுலாகும் பகுதிகளில் குடியேறுபவர்கள் விரைவில் செல்வமும் செழிப்புமுடையவர்களாக வழியிருப்பதே இந்தக் கிராக்கிக்குக் காரணமாகும்.

**1930 ம் ஆண்டுக்குப் பிறகு விநியோகிக்கப்பட்ட முடிக்குரிய காணிகளின் அளவு என்ன ?**

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 460,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் விநியோகிக்கப்பட்டு விட்டது. இதில் 400,000க்கு மேற்பட்ட ஏக்கர் காணி 230,000க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. சுமார் 54,000 ஏக்கர் நிலம் நடுத்தர வர்க்க இலங்கையர்களுக்கு அளிக்கப்பட்டது.

**இரண்டாவது ஆறுவருடத் திட்டத்தின்கீழ் மேலும் அதிக காணிகள் விநியோகிக்கப்படுமா ?**

குடியேற்றத்திட்டங்களின் கீழ் காணி விநியோக வேலைகள் துரிதப்படும். ஆனாலும், ஜனநெருக்கடி மிகுந்த, பகுதிகளிலுள்ள முடிக்குரிய காணிகள் ஏற்கனவே பெரும்

பாலும் விநியோகிக்கப்பட்டு விட்டதால், இராம விஸ்தரிப்புக் கெனக் குடியானவர்களுக்கு வழங்கப் படும் காணிகளின் அளவு குறைவதற்கு இடமுண்டு.

**1955–60 காலத்தில் பாரிய குடியேற்றத் திட்டங்களின்கீழ் எவ்வளவு காணி விநியோகிக்கப்படும் ?**

150,000 ஏக்கர் காணிகள் 30,000 பேருக்கு வழங்கப்படும். இவற்றில் 90,000 ஏக்கர் காணிகள் நீர்ப்பாசன வசதிகள் பெற்றிருக்கும். இக்காலத்தில் வருடாவருடம் 20,000 ஏக்கர் காணிகளை நடுத்தரவர்க்க இலங்கையர்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிற தென்பதும் குறிப்பிடத்தக்கது.

## 4. வனபரிபாலன இலாகாவின் வேலைகள்

**இலங்கையின் வன விஸ்தீரணம் என்ன ?**

சுமார் ஒரு கோடியே பதினைந்து லட்சம் ஏக்கர், இதில் 2,760,467 ஏக்கர் காடுகளே வனபரிபாலன இலாகாவின் பாதுகாப்பில் இருக்கின்றன.

**இலங்கையில் எஞ்சியுள்ள காடுகளைக் கவனத்தோடு பராமரிப்பது அவசியம் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. வனங்களை இலங்கையில் தற்போது பாதுகாப்பதன் நோக்கம் என்ன ?**

நாட்டின் சுவாத்திய நிலைகளைப் பாதுகாப்பதற்கும், மண்வளத்தைக் காக்கவும், நீர் நிலை வசதிகளைப்பெருக்கவும் குறிப்பிட்ட அளவு வனங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

## மர உபயோகங்களுக்கு என்ன செய்வது ?

உடனடித் தேவைகளுக்கு மட்டுமன்றி, இயன்றளவு உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கும் மரங்களின் உப யோகம் அவசியம்தான். யுத்த காலத்துக்கு முன்னர் கட்டிடத் தேவைகளுக்கு மரங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் இறக்குமதி தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, மரங்களை வெகு சிக்கன மாகவே உபயோகிக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

## வனபரிபாலன இலாகாவின் பிற அலுவல்கள் எவை ?

மரங்களையும் வனங்களிலிருந்து கிடைக்கும் பயன்படு பொருட்களையும் பரி பூரணமாக உபயோகித்துக் கொள் வதற்காக, அவற்றின் சாதக பாதகங்களைப் பற்றி ஆராய் வது வனபரிபாலன இலாகா அலுவல்களில் ஒன்று. மரங் களைக் களவாகத் தறிப்பவர்களிடமிருந்தும், சட்டவிரோத மாகக் காடுகளை அழிப்பவர்களிடமிருந்தும், அக்கினி, மர நோய், பூச்சி புழுக்களிடமிருந்தும் காப்பாற்றும் பொறுப் பும் வனபரிபாலன இலாகாவையே சார்ந்திருக்கிறது.

## விலையுயர்ந்த மரங்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

ஒரு வனப் பகுதியில் விலையுயர்ந்த மரங்களின் எண் ணிக்கை அதிகமாயிருந்தால், இவற்றோடு போட்டியிட்டு இவற்றின் வளர்ச்சியைத் தடுக்கும் தரம் குறைந்த மரங் களை வெட்டித் தள்ளுவதன் மூலம் இவை இயற்கை

யாகச் செழித்து வளர வசதி செய்யப்படுகிறது. பெரும்பாலும் குளிர்ந்த பிரதேசங்களில் உள்ள வனங்களிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

விலையுயர்ந்த மரங்கள் மிகக்குறைவாகவே வளரும் பிரதேசங்களில், அதாவது வரண்ட பிரதேச வனங்களில், வனபரிபாலன இலாகா தேக்கு போன்ற உயர்ந்த ரக மரங்களை நடும் வன மகோற்சவத் திட்டத்தைக் கையாண்டு வருகிறது.

மலைநாட்டுப் பட்டணங்கள் போன்ற, வனங்களே இல்லாத பகுதிகளில் இலாகா "யூகலிப்டஸ்" என்னும் ஒருவகைத் திராவக மரங்களை நட்டு வளர்க்க ஏற்பாடு செய்திருக்கிறது. இலங்கையில் இயல்பாகக் காணப்படாத இந்தவகை மரங்களை இலாகா இங்கு 'அறிமுகம்' செய்து வைப்பதற்குக் காரணம், இம்மரங்கள் இலங்கையில் துரிதமாகச் செழித்து வளர்வது தான். புயல்காற்று வராமல் தடுப்பதோடு, எரிபொருளாகவும் வீடமைப்புக்கான மரமாகவும் விவசாயத்தேவைகளுக்கும் இவை பயன்படுகின்றன.

**மரங்களை பக்குவப்படுத்துவது சம்பந்தமாக ஏதும் தெரிவிக்க முடியுமா ?**

மரங்களைப் பக்குவப் படுத்துவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று இயற்கையின் பொறுப்பில் மரங்களைப் பக்குவப்படுத்தும் வேலையை விட்டு விடுவது. இதற்கு மிக நீண்ட காலம் பிடிக்கும். வன பரிபாலன இலாகா சூளையில் வைத்து மரங்களைப் பக்குவப் படுத்துவது சம்பந்தமாகப் பல ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறது. இந்த

முறையின் மூலம், பக்குவப்படுத்துவதற்கான காலம், ஆறு மாதத்திலிருந்து இரண்டு வாரமாகக் குறைக்கப் பட்டிருக்கிறது.

**மரங்களைப் பலகைகளாகச் சீவாமல் கட்டைகளாகவிட்டே பக்குவப்படுத்தலாமென்று சிலர் கருதுகிறார்களே; இது சரியா?**

இல்லை. மர ரூபத்திலேயே மரங்களைப் பக்குவப்படுத்துவது சாத்தியமில்லை. மரத்தை அரிந்ததும், அதன் வெளிப்புறம் சீதோஷ்ண நிலை மாறுபாடுகளால் பாதிக்கப்படுகிறது. சுவாத்திய நிலையால் பாதிக்கப்படும் மரத்தில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. தச்சுத் தொழிலாளருக்கு இந்த விஷயம் நன்கு புரியும். அவர் ஒரு மேசை செய்ய வேண்டுமென்றால், மரக்கட்டையை தேவையான நீள அகலத்துக்கு அறுத்து எடுக்க வேண்டியிருக்கும். அப்பொழுது, மரக்கட்டையின் வெளிப்புறம் சுருங்கி விரியும், தன்மையுடையதாய் இருப்பதை அவர் கண்டு கொள்வார். மேசையைத் தரமுடையதாகச் செய்வதும் அவரால் சாத்தியப் படாமல் போய்விடும்.

**சுதந்திரம் பெற்ற பின்னர், வன பரிபாலன இலாகா அதிக ஆராய்ச்சிகள் செய்திருப்பதாகத் தெரிகிறது. இவற்றைப்பற்றி தெரிவிக்க முடியுமா?**

இது மிக விரிவான விஷயம். ஏனெனில் சுதந்திரம் பெற்ற பின்னர், வனப்பரிபாலனத் துறையின் சகல அம்சங்களிலும் ஆராய்ச்சிகளை நடத்துவதில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்து வருட காலத்தில், யாரும் பெருமைப்படத்தக்க முதற்றரமான வனபரிபாலன

ஆராய்ச்சி நிலையமொன்று கொழும்பில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்நிலையத்தில் மரநுணுக்கம், வாளாலும் இயந்திரத்தாலும் மரம் அரியும் முறைகள், இயற்கையாகவும் சூளைகளிலும் மரங்களைப் பக்குவப் படுத்தும் வழிவகைகள், மரச்சாமான்கள் தயாரித்தல்,மரங்களை வளைத்தல், மரப்பாதுகாப்பு, பலகைகளைப் பளபளப்பாக்குதல் போன்ற பல விஷயங்கள் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக வருங்காலத்தில் இந்நாட்டு வனங்கள் மிகத்திறமையுடன் நிர்வகிக்கப்படுவதற்கும், வனங்களில் கிடைக்கும் பயன்படு பொருட்களைப் பரிபூரணமாக உபயோகிக்கவும் வசதிகள் கிடைக்குமென நம்பலாம்.

**வன பரிபாலன இலாகாவின் குறிக்கோள் என்ன ?**

வருடாந்த ஒரு கோடி கன அடி மரங்களை உற்பத்தி செய்தல். இதற்குப் பாரிய அளவில் வன மகோற்சவங்களை நடத்துவது அவசியம். கடந்த ஐந்து வருட காலத்தில் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்கத்துடன் 16,347 எக்கர் நிலத்தில் மரங்கள் நடப்பட்டன.

**நாட்டில் உணவுற்பத்தியையும் பெருக்க வேண்டியிருப்பதால், வன மகோற்சவத்தையும் விட்டுக்கொடுக்காமல் நடத்துவது சிரமமல்லவா ? இந்த வகையில் நிலைமை எப்படியிருக்கிறது ?**

**உணவுற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்யும் நோக்கத்தோடு நாட்டில் மிக விஸ்தாரமான அபிவிருத்தி வேலைகள்**

நடைபெற்று வருகின்றன. இதனுல், அதிக காணிகளை வனப் பெருக்கத்துக்கென ஒதுக்கி வைத்பதில் சிரமம் இருக்கிறதென்பது உண்மைதான். இதனுலேயே, தன் பாதுகாப்பிலுள்ள வனப் பகுதிகளைப் பரிபூரணமாக உப யோகித்துக் கொள்வதில் வனபரிபாலன இலாகா சகல முயற்சிகளையும் கையாண்டு வருகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

1. 1929–30 வருடத்தில் நீர்ப்பாசன வசதி பெற்றிருந்த காணிகளின் அளவு 369,762 ஏக்கர் தான். 1953–54 வருடத்தில் இதைப் போல இரட்டிப்பு அளவு, அதாவது 764,912 ஏக்கர் காணிகள் நீர்ப்பாசன வசதியைப் பெற்றன.

2. நாணுவித பயனைத்தரும் கல்லோயாத்திட்டத்தால் நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்பு, மின்சார விநியோகம், குடியேறியவர்களுக்கான பல வசதிகள் போன்ற பல பிரயோசனங்கள் கிடைக்கின்றன.

3. வரண்ட பிரதேசக் குடியேற்றத்திட்டம் மிக அதிக அபிவிருத்தி அடைந்து மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

4. சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து உருவான முதலாறு வருடத்திட்ட காலத்தில் 88,760 ஏக்கர் காணி திருத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.

5. 157,969 ஏக்கர் காணிகளை, முடிந்தால் முதலாறு வருடத்திட்ட காலத்தில் திருத்தப்பட்ட காணிகளைப்போல் இரண்டு மடங்கு காணிகளை திருத்தி அபிவிருத்தி செய்வது இரண்டாவது ஆறுவருட திட்டத்தின் குறிக்கோளாகும்.

6. நீர் நிலைப் புனருத்தாரண மூலமும், விவசாயத் துக்கெனக் குடியானவர்களுக்குக் காணிகளை வழங்கிய தனுலும் கிராம விஸ்தரிப்புத் திட்டம் மகத்தான வெற்றியை அடைந்திருக்கிறது.

7. மரத் தேவைகளுக்கும், விறகுக்கும் மட்டுமன்றி சுவாத்திய பாதுகாப்பு, மண்வளப்பாதுகாப்பு, நீர் நிலை வசதி முதலியவற்றுக்கும் வனங்கள் மிக முக்கியமென்பது பூரணமாக உணரப் பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது